Registered No. M. 2330 "SIDDHANTHAM"

Vol. 41 —No. 4

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 41 | கீலக சித்திரை 1968 ஏப்ரல் | இதழ் 4

உள்ளுறை — பக்கம்

சேதுராமன் தோத்திரப் பாடல்கள் ... 89
திருகானூர் ... 95
மெய்கண்டார் நெறி ... 97
திருமுறையும் அருமறையும் ... 105
சமாஜத் தேர்வுகளின் பாடத் திட்டம் ... 116

இதழாசிரியர்: மு. அருணசலம், எம். ஏ.,

துணையிதழாசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாசச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாச அலுவலகத்தில் 31—3—68 ஞாயிற்றுக்கிழமை யன்று காலை 9-30 மணிக்குச் சமாசச் செயற்குழுக்கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவு கணக்கு, பிற இன்றியமையாச் செய்திகள் பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகிறனர். (செயலாளர்)

திரு. க. இராஜகோபால் பிள்ளை,
(15, விருப்பாட்சி நடப்பு, திருவாரூர், தஞ்சை மாவட்டம்)
அவர்கள் நம் சமாச ஆயுள் உறுப்பினரானமையை மகிழ்ச்சியுடன் சமாச அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சென்னை இலிங்கி செட்டித் தெருவிலுள்ள மல்லிகேச்சுரர் ஆலயத்தில் உமாமகேச்சுர பக்தஜன சபைக் கட்டிடத்தில் நம் சமாசச் சார்பில் பெரிய புராண விரிவுரையை வாரந்தோறும் வெள்ளிக்கிழமை திரு. கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் நிகழ்த்தி வந்தார்கள். அதன் நிறைவு விழா 1—3—68 வெள்ளியன்று திரு. K. E. அருணாசல முதலியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. சமாசத் தலைவர் திரு. கோ. மு. முத்துசாமிப் பிள்ளை, பொறியர் சுப்பிரமணிய பிள்ளை, நே. த. கிருட்டினசாமி முதலியார். வித்துவான் அம்பை சங்கரனார், பூ. ஆலால சுந்தரம் செட்டியார் போன்ற சமாச அன்பர்கள் கலந்து பெரிய புராண மாண்பு பற்றியும் திரு. செட்டியார் அவர்களின் உறைத்த பத்திப் பெருமை பற்றியும் விரிவுரையாற்றினர். நம் சமாச டிரஸ்டு நிதியிலிருந்து சொற்பொழிவாளருக்குப் பணமுடிப்பு முதலிய சிறப்புகளை டிரஸ்டுத் தலைவர் திருமுறைகாவலர் அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் வாழ்த்தி அளித்தார்கள். நம் சமாச அன்பர் சிவராம செட்டியார் போன்ற பல அன்பர்கள் இத்தொடர் சொற்பொழிவு சிறப்புற நடைபெற அவ்வப்போது உடனிருந்து தொண்டாற்றியமைக்கு சமாசம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 41	கீலக ஹூ சித்திரை 1968 ஏப்ரல்	இதழ் 4

சேதுராமன் தோத்திரப் பாடல்கள்

—:(ஆசிரியர்):—

"ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும், ஆதி மாண்பும், கேட்பான்புகில் அளவில்லை, கிளக்க வேண்டா" என்று சம்பந்தப் பெருமான் பாடுகிறார். இவ்வாறு இந்த நூற்றாண்டில் இறைவனால் அருளைப் பெற்றவர் அந்தண குல இளைஞரான சேதுராமன் என்பவர். இவர் திருவருளால் உந்தப்பட்டு, இறைவன் திருமுன்னும், சிறப்பாக முருகப் பெருமான் சந்நிதியிலும், கடல் மடை திறந்த வெள்ளமாகத் தோத்திரப் பாடல்கள் பாடுகின்றார் என்ற செய்தி பல பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதை அன்பர்கள் பார்த்திருப்பார்கள். தமது 15-ஆவது வயதில் திருவருள் தம்மிடத்து விளங்கப் பெற்றார் என்று அறிகிறோம். இவருக்கு இப்போது 31 ஆண்டு முடிந்திருக்கிறது. இவருடைய அருட்பாடல் பாடும் ஆற்றலை முதன் முதலில் உணர்ந்து அருள்வழி நின்று முன்னேறப் பலவகையாலும் துணை புரிந்தவர் தணிகைமணி செங்கல்வராயப் பிள்ளையவர்கள்.

கந்தர் சஷ்டி தினமொன்றில் தணிகைமணி அவர்கள் வீட்டிலுள்ள தணிகைநாதன் சந்நிதியில் சேதுராமன் திருப்புகழ் பாடுவதாக அவர்கள் அறிவித்தார்கள். அன்று சென்ற போது சேதுராமன் அறிமுகம் ஏற்பட்டது. அன்று இவர் முருகன் சந்நிதியில் தம் தமையனாரோடு முருகன் திருப்புகழ்ப் பாடல்கள் பல, தாளத்தோடு, சந்தப் பொலிவும், பொருட் பொலிவும் சிறக்கும் படியாகப் பாடிய நிலை மிகவும் சிறப்பாயிருந்தது. முருகனை இவர் வணங்கிய காட்சியும் முருகன் சந்நிதியில் மெய்ம்மறந்து நின்ற காட்சியும் ஒரு பரவசத் தன்மை பெற்றிருந்தன. கேட்பவர், பார்ப்பவர் இவருடைய மெய்ம்மறந்த நிலையைக் கண்டு உருகாமல் இருக்க முடியாது.

இவர் சென்னை வன்னியதேனும் பேட்டை இராமலிங்கேச்சுரர் ஆலயத்தில் (பாலசுப்பிரமணியர் கோயில் என்று வழங்குவது) 13—2—1966 அன்று மாலை பாடுவதாகவும், அதைப் போய்க் கேட்க வேண்டுமென்றும், தணிகைமணியவர்கள் குறிப்பிட்டார்கள். அதன்படியே அன்று மாலை யாமும் அப்போது சமாஜத்தின் செயலாளராயிருந்த நாராயணசாமி நாயுடு அவர்களும் சென்று கேட்கும் பேறு பெற்றேம்.

சுமார் இரண்டரை மணி நேரம் சேதுராமன் தேனும் பேட்டைக் கோயிலில் இருந்து வழிபட்டுப் பாடிக் கொண்டிருந்தார். பாடினர் என்று சொலலும் போது, தேவாரம் திருவாசகம் போன்ற அருட்பாடல் பாடியதை யாம் குறிப்பிடவில்லை. தம் உள்ளத்தில் உதித்துப் பாடிய புதுக் கவிதையையே குறிப்பிடுகின்றேம். புதிதாகக் கும்பாபிஷேகம் ஆன கோயில் ஆனபடியால், அன்று மாலை நல்ல கூட்டம். சேதுராமன் சகோதரர் இருவரும் வந்ததும், விநாயகர் தொடங்கி எல்லா மூர்த்திகளின் சந்நிதியிலும் முறையாக வழிபட்டு, திருநீறு பெற்று அணிந்து கொண்டார்கள். பிறகு சேதுராமன் ஒவ்வொரு சந்நிதியாக முறையே சென்று பாடல் பாட ஆரம்பித்தார்.

இவருடைய கோலமே பொலிவான கோலம். நீண்ட வடிவம். அமைதியான தோற்றம். சாந்தமான முகம். இடுப்பில் உத்தரியத்தைக் கட்டி கழுத்தில் அக்கமணி அணிந்து கையில் பிடித்த தாளத்தோடு இவர் பாடல் பாடத் தொடங்கினர். நேரே நின்று, வைத்த காலை சிறிதும் அசைக்காமல், சுவாமி சந்நிதியையே நோக்கியவராய், அவன் ஒருவனையே உள்ளத்தில் எண்ணியவராய், தம்மை மறந்த நிலையில் தாளம் போட்டுக் கொண்டு சந்தப்பாக்கள் பல பாடினர். பாடல் பாடும் போது தெளிவாக, ஒவ்வொரு சொல்லாக அடி அடியாக நிறுத்தி, இரண்டு முறை, மூன்று முறை பாடுகிறார். பாடுகிற நேரம், சுற்றி நிகழ்வது அவருக்கு ஒன்றும் தெரியாது. கம்பீரமான குரல்; வேண்டிய அளவு இசையும் கலந்திருக்கிறது. பாடப்பாட, அருகில் தமையனார் சுப்பிரமணியம் அமர்ந்து, ஒரு மேசையை வைத்துக் கொண்டு, ஒரு புத்தகத்தில் பாடல்களைத் தெளிவாக எழுதிக் கொள்கிறார்.

இவர் முருகனிடம் பக்தி பூண்டது வள்ளி மலை சச்சிதானந்த சுவாமிகள் தொடர்பினால். அதனாலேயே முருகனைப் பாடிய அருணகிரிநாதரிடத்தும் அவர் பாடிய எண்ணற்ற திருப்புகழ்ப் பாடல்களிடத்தும் மிக்க ஈடுபாடு கொண்டார். அதிகமான திருப்புகழ்ப் பாடல்கள் இவருக்கு மனப் பாடம் உண்டு. அன்றியும், பிற அருட் பாசுரங்களிலும் நல்ல தோய்வு உண்டு. தக்க அளவு இலக்கண இலக்கியப் பயிற்சியும் உண்டு. ஆகவே, இவர் தம் வசமிழந்து பரவச நிலையில் நின்று திருவருளால் உந்தப் பெற்று அருட் பாசுரங்கள் பாடும்போது, எல்லாப் பாடல்களிலும் தமிழின் சுவையும் பழமையின் மணமும் இறைவனின் அருட்பிரகாசமும் வெளிப்படுகின்றன. எதை எதைப் பார்த்தாரோ, அவை யெல்லாம் அப்படியப்படியே இவர் பாடல்களில் பயில்கின்றன. சொற்களும் தொடர்களும் கருத்துக்களும் வரலாறுகளும் அப்படியே வரக் காணலாம்.

அன்று யாம் அருகில் உட்கார்ந்து கேட்டோம். செல்வ விநாயகர் சந்நிதியில் ஒரு சந்தப் பாடல் பாடினர்.

பாடலானது மெல்ல, தங்கு தடையில்லாமல், அழுத்தத்தோடு அவரிடமிருந்து வெளி வந்தது. யாம் பார்த்த போது, அவர் உள்ளத்திலிருந்து யோசித்துப் பாடல் செய்து வெளி வந்ததாகத் தெரியவில்லை. எதிரே யாரோ கொண்டு வந்து பாடலைக் காட்டுவது போலவும் அதைப் பார்த்து அவர் பாடுவது போலவும் இருந்தது என்று சொல்லத்தக்க அளவுக்குச் சிறிதும் தயக்கமின்றி இருந்தது. ஆனால் உண்மையில் பாடல் அவர் உள்ளத்திலிருந்தே அரும்பியது. சந்தம் பாடுவது கடினம். ஆனால் அவருக்கு அது மிக எளிதாகவே வந்தது. ஓரிடத்திலாவது எழுத்துக்காகவோ, சொல்லுக்காகவோ, ஓசைக்காகவோ, சந்தத்துக்காகவோ ஒரு மாத்திரை கூடத் தேக்கமில்லை. கை தாளம் போட்டபடி இருக்க, உடலில் எந்த அசைவும் இல்லை; கண் மூடி இருந்தது. நேர் எதிர் நோக்கு. உதடுகளில் மட்டும் அசைவு; இதுவே அவர் பாடல் பாடிய நிலை.

அடுத்து, சுவாமி சந்நிதி; அங்கு ஒரு பதிகம் பாடினார். அது 'பொன்னார் மேனியனே' என்ற பண் அமைப்புக் கொண்டது. பத்துப் பாடல்களிலும் 'சென்னை வன்னியர் தேனையில் வாழ்......இராமலிங்கேச்சுரனே' என்ற மகுடம் பெற்றிருந்தது. ஒரு பதிகம் பாடி முடித்து, அடுத்துத் தாண்டகப் பதிகம் ஒன்று பாடினார். பாடல்களை யாம் எண்ணிக் கொண்டே வந்தோம். 14 பாடல்கள்; யாவும் திருமறைக் காட்டுத் தாண்டகம் போல, 'கண்டாய்' என்று முடிவன. இராமலிங்கேச்சுரர் இராமன் பூசித்த மூர்த்தி என்ற கருத்து, 'தேனாம்பேட்டை கலந்துறையும் காகுத்தற்கு இறை கண்டாயே' என்று அமைக்கப் பெற்றுள்ளது. அப்படியே முன் பதிகத்தில் கூட 'தேளார் செஞ்சடையார்' என்று ஒரு பாடலில் வந்தது. தேளணி ஒரு வகை அணி என்று தணிகைமணியவர்கள் குறித்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும் போது ஒரு கருத்து சொல்லத் தோன்றுகிறது. சாதாரண நிலையில் பேசுகின்ற. ஆராய்கின்ற, கருத்துக்களெல்லாம் மனோ தத்துவ ரீதியாகப் பார்க்கையில் இவர் தம் அடி மனத்தில் தங்கியிருந்து பாடலில் வெளிப்படுகின்றன என்றே தெரிகிறது.

அடுத்து அம்பிகை சந்நிதி. இங்கு அம்பிகை பர்வத வர்த்தனி, மலைவளர் காதலி: இங்கு இவர் உயிர் வருக்கப் பதிகமாக அகரம் முதல் அஃகேனம் வரையில் பதின் மூன்று பாடல்கள் பாடினார். இவை மலை வளர் காதலி என்ற முடிவு கொண்டவை. இரண்டாம் பதிகம் கட்டளைக் கலித்துறையாகப் பன்னிரண்டு பாடல்கள். இதனுள் மலைவளர் காதலி, பர்வதவர்த்தினி என்ற பெயர்கள் முறையாக மாறி மாறி வருகின்றன.

இதன் பின்னர் முருகன் சந்நிதி. இங்கு திருப்புகழ் போன்ற அமைப்புடைய சந்தப் பாடல்கள் ஏழு பாடினார். இவற்றுள் எளிய பாடல்களும் சிக்கலான பாடல்களும் உள்ளன. யாவுமே இவர்பால் சிறு முயற்சியுமின்றி வெளி வந்தன. அடுத்து, பதினாறு பாடல்கள் பாலசுப்பிரமணியப் பெருமான் மீது பாடினார்.

இவ்வளவும் நடப்பதற்கு இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆயிற்று. இவர் ஒவ்வொரு சந்நிதியில் பாடுந்தோறும் அருகில் சுப்பிரமணியம் அமர்ந்து எழுத, எம்போன்றவர்கள் கீழே உட்கார்ந்திருந்தோம். உட்கார்ந்தவர்கள் அரைமணி நேரம் ஒருமணிநேரம் என்று முதலில் அமர்ந்த படியே கடைசி வரையில் உட்கார இடங்கொடாமல், காலை மாற்றிக் கொண்டும், புரட்டிக் கொண்டும், உடலை வளைத்தும் நிமிர்த்தியும், அசைத்தவண்ணம் இருந்தார்கள். ஆனால், நின்று பாடிய இவரோ, நின்ற நிலையிலிருந்து சிறிதுகூட அசையவில்லை. பாதத்தை முதலில் எந்த இடத்தில் வைத்தாரோ அந்த இடத்தைவிட்டு அரைக்கால் அங்குலம் கூட நகர்த்தாதபடி நின்றிருந்தார். தாளம்போடும் போது தாளத்தின் கையசைவும், பாடும்போது உதடுகளின் அசைவுந்தவிர, வேறு அசைவு இல்லை. இது வொன்றே இவருடைய பாடல் மனித யத்தனத்திற்கு அப்பாற்பட்டது என பதை நன்கு நிரூபிக்கும். எந்தவிதச் சாதனை வல்லவருக்கும் இந்த அசைவற்ற நிலை வரமுடியாது. இவர் தம்மையிழந்த ஒரு பரவச நிலையில் இருக்கிறார் எனபதைக் கண்கூடாகக் காண முடிகிறது. இதை ஆங்கிலத்தில் 'டிரான்ஸ்' என்று சொல்லுவார்கள்.

இவ்வாறு பாடல் பாடுவது கேட்கும்போது ஒரு தனி அனுபவம். பார்ப்பவர்களும் கேட்பவர்களும் இவரிடம் உதிக்கின்ற அருட்பிரகாசத்தைக் கண்டு வியக்காமல் இருக்க முடியாது. இதுகாறும் இவர் பல ஆயிரம் பாடல்களுக்கு மேலாக இவ்வாறு பாடியிருக்கிறார். பாடியவற்றுள் சில நாகை, இருடியர்பட்டி, சங்கரர், செங்கல்பட்டு, சேலம், நங்கைநல்லூர், புவனேசுவரி, மாயூரம், வள்ளிமலை போன்ற சில — அச்சாகியுள்ளன. ஏனையவை அச்சாக வில்லை.

இவர் பிறரைப் போலக் கவி'புனைய'வில்லை. எழுத்தும், சொல்லும், அசையும், சீரும், தளையும், யாப்பும், சந்தமும் தேடிப் பாடல் கட்டவில்லை. பாடல் இவரிடம் தானாக உதிக்கிறது. தானாக ஊற்றெடுத்துப் பெருகுகிறது. நம் கண் முன்னே கவிதைப் பிரவாகம் பொழிவதைப் பார்க்கிறோம். பிரவாகம் பொழிபவர் மிக்க அடக்கத்தோடு, எளிமையோடு, சாந்தமாக, சிறிதும் தருக்கின்றி இருக்கின்ற முகமலர்ச்சி பொருந்திய ஓர் இளைஞர். ஆடம்பரமும் பகட்டும் இங்கு இல்லை. அன்பும் தஞ்சமும் நிலவுகின்றன. நான் என்னும் அகந்தை எள்ளளவும் இல்லை; எல்லாம் முருகனே என்ற பக்திநிலை நிலவுகின்றது. பார்த்தவர்களுக்கு இது சொல்லத் தேவையில்லை; பார்க்காதவர்கள் ஒரு முறை இவர் பாடும்போது பக்கம் நின்று கேட்டால் யாம் இங்குக் கூறியது குறைவு என்று கருதுவர்.

சென்னையில் வாழ்பவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு. அடிக்கடி இவர் சென்னையில் பல இடங்களில் இவ்வாறு கவிதை பாடுகிறார். அதாவது உள்ளத்தின் உள்ளிருந்து ஒரு சக்தி இவரை இயக்க, இவர் புதிய பாமாலை பாடி, ஆண்டவன் திருவடியில் சூட்டுகிறார் பண்ணுடைய பாடல்களும் சந்தப் பாடல்களும் சித்திரக் கவிகளும் இவரிடம் உதிக்கின்றன. இவ்வாறு இவர் கவிதை புனைவதை நேரில் காணும் வாய்ப்பு சென்னை வாசிகளுக்குக் கிடைக்கிறது. இறைவன் சந்நிதி தவிர, வேறு இடங்களில் இவர் இப்படிப் பாடியதில்லை.

இவருடைய அன்புப் பெருக்கும் தமிழ்ப் பாசுரம் பொழியும் ஆற்றலும் மேலும் வளர்வனவாக. இறைவன் திருவருள் பூரணமாய்த் துணைசெய்க.

திருக்கானூர்

(மு. அ.)

இடம் :- கொள்ளிடத்தின் தென் கரையில் கரையோரத்தில் பெரிய மணல் மேட்டின் நடுவே கோயில் உள்ளது. இது காவிரி வடகரைத்தலங்களுள் 56 ஆவது. கும்பகோணமிருந்து திருவையாறு செல்லும் பஸ் மார்க்கத்தில் புதுச் சத்திரம் என்ற இடத்திலிருந்து வடக்கு நோக்கிச் செல்லுகின்ற கப்பிச் சாலையில் ஒருமைல் சென்று கொள்ளிடக் கரையேறி, இங்கிருந்து கரையோடு கிழக்கு நோக்கி ஒரு மைல் சென்றால், கோயிலை அடையலாம். சாலையிலிருந்து பிரியுமுன் பக்கத்திலுள்ள விஷ்ணம்பேட்டை என்ற ஊரிலிருந்து, கோயில் குருக்களைக் கையோடு அழைத்துக் கொண்டு வந்தால்தான் சுவாமி தரிசனம் செய்யமுடியும்.

பெயர் :- கா என்பது காடு. ஒரு காலத்தில் இது கருப்பங்காடாக இருந்தது என்றும், அதனால் சுவாமிக்குக் கரும்புவனேஸ்வரர் என்று பெயர் என்றும் சொல்வார்கள். அம்பிகை பெயர் சௌந்தரநாயகி, சிவயோகநாயகி. சுவாமி பெயர் செம்மேனி நாதர் என்பதும் உண்டு. தல விருட்சம் வில்வம். கோயில் மதிலுக்கு வெளிப்புறத்தில் ஓர் அரசன் பிம்பமும் மூன்று லிங்கங்களும் வைக்கப்பட்டுள்ளன. விஷ்ணம் பேட்டையில் திருமால், வேணுகோபாலர், பெருமான் கைலாய நாதர், அம்பிகை காமாட்சி,

—புன்மையிலாச்
சன்மார்க்கர் வாழ்கானூர்த் தையல்சிவ யோகமின்னாள்
நன்மோகச் செம்மேனி நாதனே.

கோயில் :- கிழக்கு பார்த்த சந்நிதி. சமீப காலத்தில் வெள்ளத்தினால் கொள்ளிடம் கோயில் பக்கம் திரும்பிக் கோயில் முழுமையும் மணலால் தூர்த்துவிட்டது. இக் கோயில் இருந்ததே பலர் நினைவிலிருந்து மறைந்து போயிற்று. மணல் 12 அடி உயரம் வரையில் இருந்தது. மணலுக்குமேல் சுவாமி விமான கவசம் மட்டும் முனை தெரிந்தது. பின்னர் நூறு ஆண்டுகளுக்குமுன் அங்கு வந்த துறவி ஒருவர் இதைக் கண்டு, பணம் சேகரம்செய்து

தோண்டச் செய்து, கோயிலை வெளிப்படுத்தினர். வெளிப்படுத்தியும் மணல் வந்து மூடிக்கொண்டே இருந் தது. அதன்பின் 2—9—1962 இல் கும்பாபிஷேகம் நடந்த போது, கோயிலைச் சுற்றிப் பெரிய மதில் சுவர் வைத்து மண் வராதபடி தடுத்திருக்கிறார்கள். நாற்புறமும் கண் ணுக் கெட்டிய தூரம் வரையில் மணல் காடு. குடி இருப்பே இல்லை. வாயிலில் சிறிய கோபுரம் ஒன்று. கர்ப்பக் கிரகம். அர்த்த மண்டபம், பழைய கற்கோயில். அம்பாள் கோயிலும் கற்கோயில்.

மூர்த்தி :- தென்புறக் கோட்டத்தில் தக்ஷிணாமூர்த்தி. நடுவே விநாயகர். தனிக் கோயிலில் நிருதி விநாயகர்; பெரிய உருவம். பின்கோட்டம், அழகிய அர்த்த நாரீசு வரர், முருகனும் தேவியரும், வடபுறம் பிரமன், சண்டே சர், துர்க்கை மிகச் சிறிய வடிவம்.

வரலாறு :- தேவியார் சிவயோகத்தில் அமர்ந்திருக்க சுவாமி அக்கினிப் பிழம்பாகக் காட்சி தந்தார். சுயம்பு மூர்த்தி "கானூர் முளை" என்பது அப்பர் தேவாரம்.

பாடல் :- சம்பந்தர், அப்பர் தேவாரங்கள் உள்ளன. அப்பர் "கானூர் முளைத்த கரும்பு" என்று சொல்கிறார். ஊர்த் தொகையுள், சுந்தரர், கானூர் கட்டியே என்று பாடுகிறார்.

சிறப்பு :- ஏப்ரல் மாதத்தில் மூன்று நாள் காலையில் சூரிய பூஜை. உறையூர் பராந்தக சோழன், முனிவர் நந்த வனத்திலிருந்து களவு செய்த செவ்வந்தி மலர்களைத் தன் மனைவியருக்குக் கொடுத்தான். இளையவள் தான் மலர்களை அணிய, மூத்தவள் அம்மலர்களை இறைவனுக்கு அணிவித் தாள். மண்மாரி பெய்து உறையூர் அழிந்தது. கர்ப்ப வதியாயிருந்த மூத்த மனைவி மட்டும் மலரை அணிவித்த புண்ணிய விசேடத்தால் ஆற்று வெள்ளத்திலும் மண்மாரி யிலும் தப்பி இவ்வூர் அடைந்து பெருமானை வழிபட்டு உரிய காலத்தில் ஆண் மகவைப் பெற்றாள். இம் மகவே கரிகால் சோழன் என்பது ஒரு வரலாறு. கோயில் முன்

னிருக்கும் மணலை அகற்றுவதே ஒரு மும்முரமான வேலை. காண வேண்டும் என்ற வைராக்கியம் இருந்தால்தான் இந்தக் கோயிலுக்கு வரமுடியும்.

கல்வெட்டு :- ஊர் கரிகாலச் சோழச் சதுர்வேதி மங்கலத்துத் திருக்கானூர் எனப்பெறுகிறது. சுவாமி இட்சுபுரீசர். 13 ஆம் நூற்றாண்டில் மாறவர்ம குலசேகரன் நிபந்தம் அளித்திருக்கிறான். ராஜாதிராஜ சோழனது நான்காம் ஆண்டுக் கல்வெட்டு இதைக் கரிகால சோழீசுவரமுடைய மகாதேவர் கோயில் என்று குறிப்பிடும்.

மேற்கே திருமேற் கோயில் என்ற விஷ்ணு கோயில் இருந்ததைச் சாசனம் குறிப்பிடும். இதுவே இன்று விஷ்ணம்பேட்டை. குடியிருப்பு இங்குதான்; கானூரில் இல்லை.

மெய்கண்டார் நெறி

(டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி)

சைவசித்தாந்தம் தழைப்பதற்குக் காரணமாயிருந்தவை பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சாத்திரங்களுமாம். புகழ் நூல்களாகிய திருமுறைகளில் சுட்டப் பெறும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பொருள் நூல்களாகிய மெய்கண்ட சாத்திரங்களில் திட்டவட்டமாகப் பேசப் பெறுகின்றன. இயன்றவரையில் இவ்விருவகை நூல்களையும் ஒப்பிட்டுக் கற்றல் நன்மை பயப்பதாகும்.

மெய்கண்டார் நெறி என்னும் தலைப்பிற்கேற்ப அவருடைய நூலிலேயே நெறி எனனும் சொல்லை உடைய சூத்திரத்தை யெடுத்துக் கொள்ளலாம்.

'அவனே தானே யாகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.'

உயிர்களைப் பிணிக்கும் மலம், மாயை, வல்வினையாகிய மூன்றும் இல்லாமல் போவதற்காக இருசெயல்கள் தேவைப்படுகின்றன: அவை ஏகனாதலும் இறைபணி நிற்றலுமாம். தன்னையுண்ட நிலையில் உயிர் இறைவனைப் பின்னிருத்தித்தான் முனைப்புடன் முன்னிற்பதை மாற்றி வீடுபெறும் முயற்சியில் இறைவனை முன்னிருக்கச் செய்து தான் பின்நிற்க வேண்டும். இவ்வாறு இறைவனை முன்னிருத்தி அவனுடன் ஒன்றாகி (ஏகனாகி) நிற்கவே, 'யான்' 'எனது' என்னும் செருக்கு-ஆணவம்-அறுகிறது. தன் முனைப்பு அடங்கி இறைவனுடைய செம்மலர் நோன் தாளை அணையும் உயிர் அவன் அருள்வழி இயங்குகிறது. அருள்வழி இயங்கி அவன் ஏவலைச் செய்வதால் மாயை, கர்மம் ஆகிய ஏனையிருதளைகளும் அறுகின்றன. மும்தளையினின்றும் நீங்கிய உயிர் முழு விடுதலை பெற்றதாகிறது.

மெய்கண்டாரின் தந்தையான அச்சுத களப்பாளரின் விருப்பம் நிறைவேறுவதற்குத் திருஞான சம்பந்தரின் திருவெண்காட்டுப்பதிகம் வழிகாட்டியது. திருவெண்காடடைப்பற்றிய தேவாரப்பதிகங்களில் இவ்வுண்மைகளைப் பார்ப்போம். திருவெண்காட்டு முக்குள நீரில் முழுகி இறைவனை வழிபடுவோரைத் 'தோயாவாம் தீவினையே' அதாவது வல்வினையின்றாகும்; 'பிள்ளையினோடு உள்ள நினைவாயினவே வரம் பெறுவர், ஒன்றும் ஐயுற வேண்டா' என்னும் உறுதி பிறக்கும். திருவெணகாட்டிறைவன் 'வினை துரக்கும் முக்குளம் நன்குடையான்.' 'திருவெண்காட்டானென்றேத்தியவர் யாதுமொரு தீதிலரென்றுணருமினே' என்று திருஞானசம்பந்தர் நமக்கு நல்லுணர்வு புகட்டுகிறார்.

திருவெண்காட்டுத் தேவாரப்பதிகங்களில் வேறுசில தொடர்களையும் பார்ப்போம்.

'உண்டாய் நஞ்சை உமையோர் பங்கா என்றுள்கித்
தொண்டாய்த்திரியும் அடியார் தங்கள் துயரங்கள்
அண்டாவண்ணம் அறுப்பான் எந்தை'

'நாதன் நம்மை ஆள்வானென்று நவின்றேத்திப்
பாதம் பன்னாள் பணியும் அடியார் தங்கள்மேல்
ஏதந்தீர இருந்தான்'

'பிள்ளைப் பிறையும் புனலுஞ்சூடும் பெம்மானென்
றுள்ளத்துள்ளித் தொழுவார் தங்கள் உறுநோய்கள்
தள்ளிப்போக அருளுந்தலைவன்'

'ஏதங்கள்பல இடர்தீர்க்கும் எம்மிறை'
'அண்ணலை அடிதொழ அல்லலில்லையே'
'ஆதியை அடிதொழ அல்லலில்லையே'

அப்பர் தேவாரத்தில் பின்வரும் சொற்களைக் காணலாம்.

'ஊனுக்கும் இன்பம் வேண்டி யுழலாதே
வானுக்கும் வழியாவது நின்மினோ.'

'ஏதம்' 'உறுநோய்கள்' 'அல்லல்' 'அருவினை' 'தீவினை' 'ஊனுக்கு மின்பம் வேண்டியுழலுதல்'—இச் சொற்களால் ஆணவம், கன்மம், மாயை குறிப்பிடப்படுகின்றன. 'உறுநோய்கள்' என்னும் சொல்லால் உயிரை முதன்மையாகப் பற்றி நிற்கும் ஆணவம் பெறப்படுகிறது. பொதுவாக நோய் என்னும் சொல் உடற்பிணியைக் குறிக்க வழங்குகிறது. உடலின் இயற்கை நிலை—நோயற்றநிலை, நலத்துடன் இருக்கும்நிலை. நோய்செயற்கை வந்து உறுவது, 'வந்தேறி'. இவ்வாறே உள்ளமும் உயிரும் செம்மை நலத்துடன் இருக்க வேண்டியவை. ஆயின் அவையும் நோயுறுகின்றன, பிணிபடுகின்றன. நோயை நீக்குவதற்காக நோயின் இருப்பு, நோயாளியின் தன்மை, நோய்க்கு மருந்து, மருத்துவனின் சிறப்பு, ஆகிய நான்கையும் பற்றிச் சைவசித்தாந்தம் பேசுகிறது. உயிர்நோயைப் பற்றிய ஆராய்ச்சியில் மேற்சொன்ன நான்கு கூறுகளை வற்புறுத்தாமல் ஒன்றையோ இரண்டையோ மட்டும் வற்புறுத்தும் கொள்கைகளும் உண்டு. நோய் உடலுக்குச் செயற்கை என்பதைப்போல உயிரைப்பற்றிய

நோயும் செயற்கையே. ஆதலால் முடிவான உண்மை நோயாளியைப்போல காணப்படுபவன் நோயாளியல்லன், செம்மை நலமுடையவனே. அதாவது, பிணியுற்றது போலக் காணப்படும் உயிர், பிணிபடாஉயிரே; எனவே நோயாளி–மருத்துவன் எனவோ, தளையுற்ற உயிர்-தளை நீக்கும் உயிர் எனவோ இரண்டில்லை. உள்ளது ஒன்றே. இவ்வாறு அமைந்திருப்பது ஒரு கொள்கை. மற்றொன்று, தொல்லை விளைப்பது நோய், தீர்க்க வேண்டுவது நோய். ஆதலின், நோயாளி, மருத்துவன் ஆகியோரின் இருப்பு, தன்மை, அவர்கள் வேறானவர்களா ஒருவரா என்றெல்லாம் ஆராயத் தொடங்குவதைவிட, நோயின் தன்மையையும் மருந்தையும்பற்றி ஆராய்வதே செயற்பாலதென்பதாம்.

செல்வாக்குமிக்குடைய இவ்விரு கொள்கைகளையும் முற்றிலும் ஏலாதவை என்று ஒதுக்குவதற்கில்லை. நோயை முடிவான உண்மையாக ஏற்பது செயற்கையை இயற்கையாகக் கொள்ளும் தவறாகும். மேலும் நோயைப் பற்றியே எண்ணிக்கொண்டிருப்பவன் நோயாளியாய்விடுவான். 'நோய்க்கு இடங்கொடேல்' என்பதை வேறொரு வகையிலும் கொள்ளலாம். அதாவது, உயிரில் அதற்கோர் இடம் கொடுத்தால், ஒரு சமயம் அகன்றது போலக் காணப்படினும் அது மீண்டும் வந்துவிடக்கூடும். இயற்கை நிலையை-நோயற்ற இயல்பை-நினைவு கூர்வதால் நோயே வராது. வந்ததுபோலக் காணப்படினும் விரைவில் விலகிவிடும். நோயாளி மனப்பான்மையை விடுத்துத் தன்னை நலமுடையவனாகக் கருதிக்கொள்பவனே நலத்துடனிருப்பான். இங்ஙனமே தம் இயற்கை மாசற்றிருப்பது, அழுக்கின்றியிருப்பது என்பதை உயிர்கள் உணர வேண்டும். இயற்கைக்கு மாறான செயற்கை நிலையை வற்புறுத்துவதால் நன்மையில்லை. இவ்வாறே மற்றைய கொள்கையும் செயல்முறைக்கானதோர் உண்மையை வற்புறுத்துகிறது. நோயுற்ற நெருக்கடியான நிலையில் உடனடியாகச் செய்யவேண்டியதை விடுத்து கொள்கை இயலான ஆராய்ச்சியில் அக்கரை கொள்வது

சரியன்று. நோயைத் தீர்க்க வேண்டிய முயற்சியே செயற்பாலதாகும். நோயின் தன்மையையும் அதைத் தீர்ப்பதற்கு வேண்டிய மருந்தையும்பற்றி உடனடியாகத் தெரிந்துகொள்ளுதல் சாலும்.

இனி மேற்சொன்ன இரு கொள்கைகளும் முழுமையும் பொருத்தமும் உடையனவா என்று பார்ப்போம், நோயை அடியோடு மறுக்காமல் வந்துறுவதாகக் கொண்டாலும் அந்த நிலையில் அதற்கு இருப்பிடம் வேண்டும். ஓரிடத்திலும் இடங்கொள்ளாத நோயின் இருப்பே நமக்குத் தெரியாமல் போகும், நோயும் சடுதியில் தோன்றி மறையாமல் தான் பற்றியவனை விடாமலிருப்பதை மாணிக்கவாசகர் போன்ற சமயச்சான்றோர் குறிப்பிடுகின்றனர்.

'இருந்தேன் நோய்க்கு விருந்தாயே'—(திருவாசகம்)
'என்னைவகுத்திலையேல் இடும்பைக்கிடம் யாது
சொல்லே' (அப்பர் தேவாரம்)

நோய் வந்துறுவதும் நீடித்திருப்பதும் சமய வாழ்க்கையில் மறுக்க முடியாத உண்மை. நோய் தீர்வதற்காகவே பயிற்சி முறைகள் கையாளப்பெறுகின்றன. எனவே, நோயற்ற நிலை இயற்கை என்பதற்காக நோய்தீர்ந்தபின் அது இருந்ததென்பது மருட்சி என்று கூறி அதன் இருப்பை மறுப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. மேலும் நோயாளிக்கும் மருத்துவனுக்குமுள்ள வேற்றுமையை மறுத்து அவர்களிருவரும் ஒருவரே என்பதும் சரியெனத் தோன்றவில்லை. உலகியலில் மருத்துவனும் நோயாளியாகக்கூடும் என்பது பொருந்தும். ஆனால் உயிர்ப்பிணி நீக்கும் இறைவன்- 'தீரா நோய் தீர்த்தருள வல்லான்'- இயல்பாகவே பிணியில்லாதவன். எனவே உயிர்ப்பிணியை நீக்கும் மருத்துவனாகிய அவனையும் பிணியில் சிக்குண்ட உயிரையும் ஒன்றெனக் கொள்ளுதற்கில்லை. ஒருவகையில் அவனே மருத்துவன், அவனே மருந்து. வேறொரு வகையாகச் சொன்னால் அவனைப்பிரிவதாலேயே நோய் ஏற்படுகிறது, அவனைக் கூடுவதாலேயே நோய் தீர்கிறது. நோயைப் பற்றியே நினைத்துக்கொண்

டிருப்பது நலத்திற்கு ஒத்ததன்றெனினும் நலமடைந்த பின், நோய் நிலையை மறுப்பதும் நோய் தீர்த்த மருத்துவனை மறப்பதும் உயிர் வரலாற்றை முழுமையாகக் கூறுவதாகா. எனவே உயிர் வரலாற்றைச் சரிவரக் கூறவேண்டுமானால் நோய்வாய்ப்பட்டிருந்த நிலை, மருத்துவனால் அது தீர்க்கப்பெற்றது, மருத்துவனின் பேருதவி, மருத்துவனின் பெருஞ்சிறப்பு இவையெல்லாம் சேர்க்கப்படவேண்டும்.

இனி இந்நோயின் தன்மையைச் சிறிது பார்ப்போம். ஆணவம் மூலமலமாகக் கருதப்படுகிறது, உயிருடன் பொருந்தி உடனிருப்பதால் இது சகஜமலமெனப்பெறும். தன் முனைப்பினால் 'யான்' 'எனது' என்னும் எண்ணத்தைத் தோற்றுவித்துத் தன்னையே அனைத்திற்கும் மையமாகக் கொள்ளும்படி இது உயிரை உந்துகிறது. செம்பில் களிம்பு உடனிருப்பதைப்போல ஆணவம் உயிரில் உறைந்து நிற்கிறது. களிம்பை நீக்கிச் செம்பைப் பொன் வண்ணமாக்குவதற்குக் குளிகை தேவைப் படுவதைப் போல உயிரும் தன்னை ஆண்டவனின் அடிமையாகக் கருதும்போது ஆணவ அழுக்கினின்றும் விடுதலை பெறுகிறது. 'செம்பு பொன்னாகும் சிவாய நம வெனில்'-ஆண்டவனாகிய சிவனை வணங்கினால் மாசு நீங்கித் தூய்மை வெளிப்படும்.

தற்கால உளஇயல் முறையில் பார்க்கும்போது ஆளுமை (Personality) ஒவ்வொருவருக்கும் உண்டு; உடனாயது நீக்க முடியாதது. ஆனால் நல்ல ஆளுமையாக இருப்பதற்குத் தன்னை மையமாகக் கொள்ளக்கூடாது. தன்னை மையமாகக்கொண்டு ஆளுமையை வளர்த்தால் அது இராவணாகாரமாகும். தன்னைச் சிறப்பாகக் கருதும் மருட்சி (Paronia), தன்னைப் பெரிதாகக் கருதும் பிறழ்வு (Megalomania) போன்ற நிலைகள் ஏற்படக்கூடும். இவ்வாறு ஆளுமையை வளர்ப்பதால் தனக்கும் நன்மை இல்லை, பிறருககும் நன்மை இல்லை. இறைவனைத் தனக்கு மையமாகக் கொண்டு வாழ்க்கையை நடத்தினால் அறிவு, ஆற்றல், அன்பு பெருகிக்கொண்டு போவதுடன் அவை ஆக்க வழியில் இயங்கி உயிர்த்திரளனைத்திற்கும் நன்மை

பயக்கும். அடிப்படை மாற்றம் பற்றிய இந்நிலை இறைவனை இடைவிடாது தொழுவதால் ஏற்படக்கூடியது. இவ்வுண்மையை நினைவூட்டும் வகையில் 'அண்ணலை அடி தொழ அல்லவில்லையே', 'ஆதியை அடி தொழ அல்லவில்லையே', 'தொழுவார் தங்கள் உறுநோய்கள், தள்ளிப் போக அருளுந் தலைவன்' என்றெல்லாம் அறிவுறுத்தப் பெறுகிறது. இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் அத்வைத நிலையிலும் தொழுகை இன்றியமையாததென மெய்கண்டார் வற்புறுத்துகிறார்.

'அது இது என்றது அது அல்லான் கண்டார்க்கு
அது இது என்றதையும் அல்லான்—பொது அதனில்
அத்துவிதம் ஆதல் அகண்டமும் தைவமே
அத்துவிதி அன்பின் தொழு.'

மாயையிலிருந்து உயிர்களின் உடல், உயிர்கள் வாழும் உலகம், நுகர் பொருள்கள் ஆயவை எழுகின்றன. பழையவினைப்பற்றறுக்கும் வகையிலும் இறைவனைத் தொழவும், அவன் படைத்த உயிர்களுக்குத் தொண்டு செய்யவும் மாயையினின்றும் பெறப்படும் பொருள்களைப் பயன்படுத்தவேண்டும். ஆனால் உயிர்கள் இவற்றைத் தவறாகக் கையாளுகின்றன. 'வானேக்கும் வழி யில்லாது 'ஊனேக்குமின்பம் வேண்டி' யுழல்கின்றன. எனவே ஆணவ இருளிலிருந்து நீங்குவதற்கு விளக்கொளிபோலத் துணையாக இருக்கக் கூடிய மாயை, தளையை நீக்குவதற்கு மாறாகத் தானும் ஒரு தளையாகிவிடுகிறது. இன்பம் உலகியற் பொருளகளிலன்று, இறைவன் திருவடி நிழலில் தான் என்பது உயிர்களுக்கு எளிதில் புலப்படுவதில்லை. மேனாட்டுச் சமயச் சான்றோர் ஒருவர் கூறியது ஈண்டு நினைவு கூரற்பாலது. 'நாம் உலகத்தைப் பயன்படுத்தி இறைவனிடம் இன்பத்தை நாடவேண்டும்; நாம் செய்யும் தவறு இறைவனைப் பயன்படுத்தி உலகத்தில் இன்பம் நாடுவதாகும்.'

காமத்தலை ஏற்படுவதற்குக் காரணம் நம் செயல்களுக்கு நாமே முதலாளி என்னும் தன் முனைப்பும் கடமையில் பற்றில்லாமல் அதன் விளைவுகளில் பற்றுக்கொள்வதுமாகும். நம் செயல்களுக்கு நாமே முதலாளி என்னும் பொறுப்பைச் சரிவர ஏற்றால் நாம் செய்யும் தீயவினைகளின் விளைவுகளிலிருந்து தப்பவும் நாம் செய்யாத நல்வினையின் விளைவுகளைக் கவரவும் முயலமாட்டோம். மேலும் கடமையைச் செய்வதனால் துன்பம் ஏற்படினும் தயங்காமலும் கடமையைச் செய்யாததால் நன்மை ஏற்படக்கூடியதாகத் தோன்றினும் கடமையைத் தவிர்க்காமலும் இருக்கக்கூடிய முதிர்ச்சி அல்லது பக்குவம் உயிர்வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இதற்கும் மேலாக, இறைவனின் கருவியாகத் தன்னைக் கருதி அவன்வழி இயங்கும் நிலை இம்முதிர்ச்சியின் ஓர் உயர் நிலையாகும். பொதுவாக இது ஒரு பிறவியில் அடையக்கூடியதன்று. தம் வினைகளுக்கேற்ப உயர்ந்தும் தாழ்ந்தும் உயிர்கள் பல பிறவி எடுப்பதால் இம்முதிர்ச்சி மெல்ல ஏற்படுவதாகும். தன்னலம் நாடாது பிறர் நலத்திற்காகப் பாடுபடுவது, பிறருடைய துன்பத்தை யேற்கவும் முற்படுவது, இவை இவ்வுயிர் வளர்ச்சியில் முற்றும் முதிர்ந்த நிலை-அருள்நிலை. இவ்வருள் நிலையைப் புலப்படுத்துவது இறைவன் நஞ்சையுண்ட நிகழ்ச்சி. எனவே, இறைவனைத் தொழுது தொண்டு செய்ய முற்படும்போது அவர் நஞ்சு உண்டதை நினைவு கூர்ந்து அதனை மேல்வரிச்சட்டமாகக்கொண்டு இயன்றவரையில் அம்முறையில தொண்டு செய்வது உயிர்வளர்ச்சிக்கு இன்றியமையாததாகிறது. இவ்வாறு அவனுடன் ஒன்றாகித் தொழுது தொண்டு செய்தால், துயரங்கள் நம்மை அண்டாவண்ணம் இறைவன் அவற்றை யறுப்பான். மெய்கண்டார் இந்த நெறியைநமக்குக் காட்டுகிறார்.

'அவனே தானே யாகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.'

திருமுறையும் அருமறையும்

—: (சிவ. மீனாட்சி சுந்தரசிலை, சென்னை) :—

(சென்ற இதழ் தொடர்ச்சி)

எ.டு. 'துன்பம் நும்மைத் தொழாத நாள்' (ஞானசம்பந்தர்) பொருள் :— மெய்ப் பொருள். அது புகழ்தல்.

அப்பர் பாடிய 'கூற்றாயினவாறு' என்னும் பதிகத்தால் தெளிவுறலாம்.

அறம் – பிறப்பறுப்பது. சுந்தரர் பிறப்பறுக்கவே உலகிற்கு வந்தார். இவையெல்லாம் அருளால் ஆவதென்பதை உணர வேண்டும்.

" பாசத்தால் இட்ட அருள், அந்தப் பாசத்தின்
நேசத்தை விட்டதருள் அந்த நேசத்திற்
கூசற்ற முத்தி அந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்று நினைவரு ளாமே "

இப்பாட்டு பத்தாம் திருமுறையில் 7-ஆம் தந்திரத்தில் வருவது-சுந்தரர் தேவாரம் 7-ஆம் திருமுறை.

நக்கீரர் கயிலை பாதி, காளத்தி பாதி,

" பாசத்தை விட்டுநின் பாதத்தின் கீழேயென்
நேசத்தை வைக்க நினைகண்டாய் – பாசத்தை
நீக்குமா வல்ல கைலாயா; நீ என்னைக்
காக்குமாறு இத்தனையே காண் "

" கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு " (திருக்குறள்)

" கட்டிய நீயே அவிழ்க்கின் அல்லது
எட்டனை யாயினும் யான் அவிழ்க் கறியேன் "

(பட்டினத்துப் பிள்ளையார்)

திருமுறைகளைப் பாடத் தொடங்கும் அருளாளர், அன்பர், ஆசிரியர், மாணவர் முதலிலும், முடிவிலும் திருச்சிற்றம்பலம் என்று சொல்லப்படும் செந்தமிழ் மாமறையினை ஓதிக் கொண்டு வருவது பண்டும், இன்றும், என்

றும் உள்ள மரபாகும். அத்திருச்சிற்றம்பல மாமறை ஒற்று நீக்கி எண்ணுங்கால் ஆறெழுத்துக்களாகும். அஃது இருமுறை கூறப்படுதலின் இரண்டுங் கூடித் தொகை கொள்ளின் பன்னிரண்டு எழுத்துக்களாகும். அப்பன்னிரண்டு என்னும் எண், பன்னிரண்டென்னும் திருமுறைகளுக்கு அமைதி எனக் கூறலாம். ஐந்தெழுத்தின் விரிவே அனைத்து நூல்களும். அதுபோல் முதலும், முடிவுமாக ஓதப்படும் திருச்சிற்றம்பலத்தின் விரிவே பன்னிரண்டு திருமுறைகளும்.

மேலும், தமிழ் மொழியின் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டாகக் காணப்படுகின்றன. அவ்வெண் ஒப்பும் இப்பன்னிரு திருமுறைகளுக்கும் பொருந்தும். மேலும், உயிரெழுத்து பன்னிரண்டனுள் நெட்டெழுத்துக்கள் ஏழெனவும் குற்றெழுத்துக்கள் ஐந்தெனவும் காண்கின்றோம். அவை போல் தேவாரத் திருமுறைகள் ஏழும் ஏனைத் திருமுறைகள் ஐந்துமாக அமைந்துள்ளமையும் உற்று நோக்கற்பால.

குற்றெழுத்துக்குப் பின் நெட்டெழுத்துத் தோன்றியிருக்குமென இலக்கண வழியாகக் காணப்படுகிறது. எழுத்து வைப்பு முறைகளுக்குப் பொருள் பொருத்தம் காட்டத் துணிந்த ஆசிரியர் நச்சினார்க்கினியரும், குற்றெழுத்தின் பின் நெட்டெழுத்து நின்றமைக்கு ஒரு மாத்திரையோடு பிறிதொரு மாத்திரை கூடி இரண்டு மாத்திரை ஆவது போல, ஒரு மாத்திரை எழுத்தை முன்னர் வைத்து, இரண்டு மாத்திரை எழுத்தைப் பின்னர் நிறுத்துவதே முறையென்றார்.

ஆனால் ஒலியமைப்பை நோக்குவார்க்கு இயல்பாய் எழும் ஓசை இரண்டு மாத்திரை என்றும், அதனைக் குறைத்துக் கூறும் ஓசையே ஒரு மாத்திரை யென்றும் நன்கு புலனாகும்.

சிற்றுயிர்கள் ஒலிக்கும் எலியும், சிறு பிள்ளைகள் முதற்கண் சொல்லும் சொற்களின் தொடக்கங்களும் நெடில

ஓசையாக இருக்கின்றன. அதனால் இவ்வுண்மையை உணரலாம். இவற்றை வலியுறுத்துவது யாப்பு முறையில் அசை, சீர்பிரித்துக் காட்டுமிடத்து நேரசையானாலும், நிரையசையானாலும் இரண்டிரண்டு மாத்திரையாகக் காணப்பட்டு ஒலித்து வரையறை செய்யப்பட்டு வருவதால் விளங்கும்.

குற்றெழுத்து ஐந்திற்கும் ஏனைத் திருமுறைகள் ஐந்தும் ஒருபுடை யொப்பாக, எட்டாந் திருமுறை தொடக்கத்தில் "நமச்சிவாய வாழ்க" என்னும் செந்தமிழ் மாமறை காணப்படுகின்றது. 'நமச்சிவாய' என்னும் மந்திரம் ஐந்தெழுத்துக்களைக் கொண்டது. அவ்வைந் தெழுத்தும் ஒவ்வொரு மாத்திரையுடைய எழுத்துக்களே அதில் காணப்படும் 'வா' என்னும் நெடில் வகரத்தின் நீட்டமே. எனவே, அவையனைத்தும் ஓரெழுத்து ஒரு மாத்திரை அமைந்தமை புலனாகும்.

இம்மட்டுமன்று, ஏழு திருமுறைகளுள் முதற் கண் தொடங்கிய முதல் திருமுறை முதலெழுத்து 'தோ' என்னும் நெட்டெழுத்தாலாயது. அதன் தொடர்பாகிய ஏனைய ஆறு திருமுறைகளின் தொடக்கங்கள் எவ்வாறிருப்பினும் நெட்டெழுத்து இயல்பையே அமைத்துக் கொள்ள வேண்டும். எஞ்சிய ஐந்து திருமுறைகளில் முதற்கண் தொடங்கிய எட்டாந் திருமுறையில் முதற்கண் காணப்படும் நகர எழுத்து ஒரு மாத்திரை எழுத்தாகும். அதன் தொடர்பாகிய ஏனைத் திருமுறைகள் எவ்வாறு தொடங்கப்பட்டிருப்பினும் அவ்வொரு மாத்திரையின் இயல்பே எனக் கொள்ளுதல் வேண்டும்.

திருமுறை பன்னிரண்டிற்கும், சிவஞானபோதச் சூத்திரம் பன்னிரண்டும் இலக்கணம் என்று திருவருளும், முன்னறிவும் வாய்ந்த நம முன்னோர்கள் கூறுவர். கூறுவது மட்டுமன்றி ஒப்புடன் எடுத்துக் காட்டுவர்.

அங்ஙனம் ஆய்ந்து காட்டுவதற்கு அடிப்படையாக நின்றது, திருமுறை பன்னிரண்டனுள் எட்டாவதாகிய

திருவாசகமும், சூத்திரம் பன்னிரண்டனுள் எட்டாவதா கிய 'ஐம்புல வேடரின்' என்பது மாகும்.

இலக்கணமாக அமைந்த எட்டாம் சூத்திரத்தின் கருத்து ஆருயிர்களுக்குப் பரிபக்குவம் வரச் செய்து, சிவ பெருமான் மானிடச் சட்டை சாத்தி, குருவாய் வந்து, மல மாயா கன்மங்களினின்றும் விடுவித்துக் கொள்வான் என்ப தாகும். எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தின் அருள் ஆசிரியராகிய ஆளுடைய அடிகளென்னும் மாணிக் கவாசகப்பெருமானுரைச் சிவபெருமான் சிவகுருவாய் மானி டச் சட்டை சாத்தி வந்து திருப்பெருந்துறையில் குருந்த மர நீழலில், ஐந்தெழுத்தோதி ஆட் கொண்டார். ஆகவே இத்திருமுறை எட்டாம் சூத்திரத்திற்கு இலக்கியமாயிற்று. இது போன்று மற்றைய திருமுறைகளுக்கும் மெய்கண்ட சிவஞானபோத சூத்திரத்திற்கும், இலக்கிய, இலக்கண ஒப்பு நுண்ணுணர்வால் கண்டு கொள்ளலாம்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னுமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

நாமங் கேட்டாள் என்பது சிவஞான போதத்தில் முதற் சூத்திரத்தில் பெறப்படும், ஒடுங்கி, அந்தம், ஆதி எனப் படும் சிவபெருமானுக்குரிய காரணப் பெயர்கள் மூன்றை யும் கேட்டாள் என்பதாம். இவற்றைக் கேட்கும் உயிர் கள் பல என்பது அவன், அவள், அது என்னும் பாகுபாட் டால் உணரலாம். இப்பாகுபாட்டனுள் அஃறிணைப் பொருள்கள் அவன் அவள் என்னும் உயர்திணைக்கு வந்தே கேட்டு உய்தல் கூடும். தமிழ் நூன் முறைப்படி ஆணும், பெண்ணும் நூல் கேட்டற்கும், கேட்டவாறு ஒழுகுதற்கும், ஒழுகி உய்தற்கும் உரிமையுடையரென்பது

சூத்திரத்தில் அவன், அவள் என்னுஞ் சொல்லால் பெறப்படும். அவன், அவள் என்னும் இரு பாகுபாடும் அடக்கமும் பேணுதலும் ஆகிய அவள் என்னும் ஒரு சொல் தன்மையே யெய்தல் வேண்டும். அக்குறிப்புத் தோன்ற முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள் என்பது முதலியவற்றில் உயிர்கள் பெண்பாலாக உருவகிக்கப்பட்டன. உண்மையாக நோக்குங்கால், ஆண்டு அடக்கி, இன்பம் அருளும் ஆண்டவன் ஒருவனையே ஆண்பாலாகவும் அடிமையாய் அடங்கி இன்பம் நுகரும் ஆருயிர் அனைத்தும் பெண்பாலாகவும் உருவகிக்கப் படுவதே ஏற்புடைத்தாகும். இதனைக் குமரகுருபரர்,

"கருவிகட் கிறைமை காட்டுபு நிற்றலிற்
    புருட நாமம் புனைந்தன மாயினும்
அத்த நிற்குறிப்பிற் சத்திகள் யாமே
    புருடனைச் சத்தியிற் புணர்த்தனை யன்னதற்கு
ஒருகாட் டென்ப புருடோத் தமனே"

என அழகாக விளக்குகிறார்.

மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்—இஃது இரண்டாம் சூத்திரத்திற்கு ஒப்பு. மூர்த்தி என்பது உயிர்களை ஆண்டவன் உடம்பாகக் கொண்டு உயிர்க்குயிராக நின்று ஆட்டுவிக்கும் தன்மையால் பெறப்படும். வண்ணம் என்பது தன்மை எனப் பொருள்பட்டு, அவனது சத்தியாகிய ஆணை, ஒன்றாய், வேறாய், உடனாய் கலந்து இயக்கும் தன்மையாகும். அங்ஙனம் இயக்குங் காலத்து எல்லாப் பொருளும் ஒன்று போல் இயக்கப்படாமல், பள்ளி மாணவர்கள் போன்று பலவாக இயக்கப்படுவதற்குக் காரணம் அவ்வவ் உயிர்களுக்குரிய இருவினையால் என்பது பெறப்படும். அஃது ஆணையின் இருவினை என்பதால் அறியலாம். இவ்விருவினைக் காரணமாக வினைகள் நீங்கும் வரை இறந்தும், பிறந்தும் வரச் செய்யும் தன்மை போக்கு, வரவு புரிதல் என்னுஞ் சொல்லால் பெறப்படும்.

பின்னையவனுடைய ஆரூர் கேட்டாள்—ஆரூர் என்பது திரு வருள் நிறைந்த ஊர் என்பது பொருள். அது திருவா ரூர், திருவாய்மூர் என்னுஞ் சொற்களால் அறியலாம். காயமே கோயில் என்பதனால், நூலில் படிக்கின்ற பாடம் மனத்தில் அமைவதற்கு நூல் கருவியாக இருப்பதுபோன்று திருவூரும், திருக்கோயிலும் காயமே கோயிலாவதற்கு வழி யாக நிற்கும் துணைக் கருவிகளேயாம். அதனால் அவனு டைய ஆரூர் என்பது காட்டு எட்டனுள், எழுவகைக் காரணத்தால் உடம்பினுள் உயிர் காணப்படும் என்று விளக்கிச் சொல்லப்படும். மூன்றும் சூத்திரத்தில் உள்ள படி ஆருயிரே அவனுக்கு நேர் உறையுளாகிய திருவூரா கும். மூன்றும் சூத்திரத்தின் தொடர்பாய். அதனுள் அடங்குவதே நான்காம் சூத்திரமாகும். இவ்வுண்மை நான்காம் சூத்திரத்தின் கருத்தமைக்கும் போது மெய் கண்ட நாயனார் 'இதுவுமது' என்று மாட்டெறிந்து இரண் டையும் ஒன்றாக்கியதால் பெறப்படும்.

பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்—நல்ல உருவமும். நல்ல செய்கையும், நல்ல இடமும், அருளால் வாய்க்கப் பெற்ற ஒருவர் தமக்கென வாழாது, பிறர்க்கென வாழ்ந்து. பிறர்க்கே எல்லா நன்மையும் புரிந்து, பேரும். புகழும், பெருமையும் பெற உலகிற் காண்கின்றோம். அதுபோன்று ஆண்டவன் பெருந் தண்ணளியால், தன்னை விட்டு நீங் காத பராசத்தியின் வழி ஆதி சத்தியைக் கொண்டு உலகு. உடல், கரணங்கள் எல்லாவற்றையும் உயிருக்கு அளித்து தானும் அவற்றோடு உடனாய் நின்று, காட்டி வருகின்ற பேருதவி ஐந்தாம் சூத்திரததால் பெறப்படும். இவ்வுண் மையை நினைக்குந்தோறும் உயிர்களுக்கு அப்பெருமானி டத்து. பேரன்பு உண்டாவது இயற்கையாகும். இதுவே பிச்சியானாள் என்பதாம்.

அன்னையையும் அத்தனையும் அன்றே நீர்த்தாள் – ஒரு பெண் பிறந்து வளர்ந்து பருவம் எய்தும் வரைக்கும் தன் தாயுடனும், தந்தையுடனும், உடன் பிறந்தாருடனும் அன்புடன் ஒட்டி வாழ்ந்த வாழ்க்கை, பருவம் வந்தவு டன் 'தந்தை யார், தாய் யார்' என்று சொல்வது போல்,

கணவனை நோக்கி இவர்களை விட்டு நீங்குவதைக் காண்கின்றோம். அதுபோல், உயிர் தான் அடைய வேண்டிய கணவனாகிய சிவத்துண்மை பெறப் பட்டதும், யான் என்னும் தாயையும், எனதென்னும் தந்தையையும் விட்டு நீங்கியும் பின், ஆதி சத்தி, அருட் சத்தி என்று சொல்லப் படுகின்ற தாயையும், சிவபெருமானால் கொள்ளப்படுகின்ற தடத்த இலக்கணம் எனப்படும் திருவுருவங்களாகிய தந்தையையும் விட்டு நீங்கி, உண்மை வடிவாகிய சிவபெருமானின் உண்மை, அறிவு இன்பப் பேற்றினைப் பெறும். இதுவே அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் என்பதாகும் இதன் ஒப்பாகிய ஆறுஞ் சூத்திரத்தில் சிவ பெருமான் உலகியல் போன்ற உருவமாகிய தடத்த இலக்கணத்தால் அறியப்படும் பொருளுமல்ல. ஒருவாற்றான் முயற்கோடு போன்று அறியப்படாத சூனியப் பொருளுமல்ல. அவனருளால் அவன் தாளை வணங்கித் தாடலை போல் புணர்ந்து, பேரின்பம் நுகரலாமென்பது உணர்த்துவதாகிய 'சிவசத்து' என்னுஞ் சொல்லைக் கொண்டு திகழ்கிறது. சிவம் என்னுஞ் சொல் வேறாக நின்று அவனை அறிய முடியாத பேரின்பத்தை உடையன் என்பதாகும். சத்தென்பது அவனருளால் அவனுடன் புணர்ந்து, அவன் கண்ணே கண்ணாகக் கொண்டு, அவ்வின்பத்தை நுகரும் உண்மை என்பதாகும்.

ஏழாம் சூத்திரம் ஆருயிர்க்குச் சார்ந்தறியும் தன்மையில் மாயையோடு சார்ந்து உலகத்தை அறிதலும், அருளோடு சார்ந்து சிவத்தை அறிதலும் ஆகிய இரு தன்மை உண்டென்பதைக் கூறுகிறது. அது ஆறுஞ் சூத்திரத்தில் சொல்லியதையே விளக்கமாக விரித்துச் சொல்வதாகும். இவ்வுண்மை, மெய்கண்ட நாயனார் அச்சூத்திரத்தின் கருத்துரைக்குங்கால் 'மேலதற்கு ஒரு புறனடை உணர்த்திற்று' என்று ஓதுவதால், இரு சூத்திரமும் ஒரு பொருள் என்பது விளங்கும்,

அகன்றுள் அகலிடத்தார் ஆசாரத்தை – நெடுநாள் தன்னோடு கூடப் பிறந்த வீட்டில் உள்ளாரை யெல்லாம் விட்டு நீங்கி அவர்களது உடன்பாடுமின்றி, அளவிறந்த

காதன் முறையால் கணவனோடு கூடிச் செல்லும் கற்புடைய காதல் மனைவி முறையாகச் சென்றிருந்தாலும், உலகினர் கற்பு நெறியால் மண முடித்துப் போகாமையை ஆசாரமில்லாத பழி தூற்றற்குரிய பொருந்தாச் செயல் எனப் புகல்வர். அதுபோல் எட்டாஞ் சூத்திரத்தில் நெடு நாளாக விட்டு நீங்காத ஐம்புல வேடருள்பட்டு அவற்றின் வழியே சென்ற உயிர், காதலனாகிய சிவகுருவைக் கண்டதும், ஐம்புலத்தோடு மேவாமலும், பின் அவற்றின் வழி போகாமலும், தான் தனித்துக் காதலன் திருவடிக்கே அடைக்கலம் புகும். உடன் போக்கில் செவிலித்தாய் பின் தொடர்ந்து தேடிச் செல்வது போன்று ஐம்பொறிகளும், அவ்வுயிர் ஆண்டவன் தொடர்பிற்பட்டதும், வழிபாடு முதலியவற்றிற்குத் துணையாக நிற்பதற்கு அவ்வுயிரைப் பின் தொடர்ந்து அவ்வுயிரோடு சேர்ந்து நிற்கின்றன. இதுவே அகன்றுள் அகலிடத்தார் ஆசாரத்தை என்பதாகும்.

தன்னை மறந்தாள் – ஒப்பில்லாத தன் உயிர்க் காதலனாகிய சிவகுருவை அடைந்த உயிர் இடையறாது அவன் திருப் பெயராகிய 'நமசிவய' என்னும் நற்றமிழ் ஐந்தெழுத்து மந்திரத்தை உணர்வினில் ஓயாது கணித்துக் கொண்டிருக்கும். (கணித்தல்-செபித்தல்) இம்மந்திரம் நமசிவய எனவும், சிவயநம வெனவும், சிவயசிவ எனவும், சிவசிவ எனவும் நால்வகைப்படும். இவை நான்கும் சரியை முதலாகச் சொல்லப்படுகின்ற நற்றவப்படி நான்கில் உள்ளார்க்கு முறையாக ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றாகும். அவற்றுள், இங்கே உணர்வில் ஊறுவதாகியது சிவசிவ என்னும் திருவைந்தெழுத்தாகும். இம்மந்திரம் நான்கெழுத்தேயாகிலும் யகரம் தொக்கி நிற்பதால் ஐந்தெழுத்தென்றே சொல்லப்படும். ஒன்பதாம் சூத்திரம் திருவைந்தெழுத்தைப் பற்றி விளக்கமாகச் சொல்லுகின்றது. மேலும் பாசி படர்ந்த குளத்தில் கல்லினை எறியும் போது விட்டு நீங்கியும், பின்னர் ஒட்டியும் படரும் பாசிபோல், ஐந்தெழுத்தை ஓதுங்கால் விட்டு நீங்கிய மலமாயாகன்மங்கள், மறந்த பொழுது ஒட்டி மூடும். ஆதலின் மறவாமல் ஓத

வேண்டும் என்பது குறிக்கப்படுகிறது. எனவே, தன் நினைப்பற்று சிவன் நினைப்பாக இருப்பது தான் திருவைந்தெழுத்தை உணர்வில் கணித்தல்; உலகியலில் ஈடுபடுவாரும் ஒன்றைச் சேர்ந்து இன்பம் அடைய வேண்டுமானால் தன்னை மறந்தே ஆக வேண்டும். அதனால் தன்னை மறந்தாள் என்பது இதற்கு ஒப்பாகும்.

தன்னுமங் கெட்டாள் உலகியலிலே ஒருவர்க்குப் பிறப்பினால் அமையும் பெயரும்; அறிவு, ஆக்கம், ஆற்றல் இவற்றால் அமையும் பெயரும்; இருப்பிடம் முதலியவற்றால் அமையும் பெயரும் எனப் பெயருக்குக் காரணம் பலவாகும். அப்பெயர்களெல்லாம், உடம்பொடு ஒழிவதும் மீண்டும் பிறப்பைத் தருவதும் நிலையில்லாததும் ஆகும். ஆனால், உயிருக்கு அடிமை யென்னும் பெயரும், ஆண்டான் திருப்பணியைப் புரிவதாகிய இறைபணி நிற்றல் என்னும் செயலும், என்றும் நிலையாக உள்ளதும், மாறா இன்பம் தருவதும் ஆகும். இதுவே தன்னுமங் கெடுதல் என்பதும், ஏகனாதல் என்னும் அடிமைப் பெயரும், இறைபணி நிற்றலாகிய அடிமைச் செயலும் பத்தாம் சூத்திரத்தால் பெறப்படும். எனவே தன்னுமங் கெட்டாள் என்பது பெறப்பட்டது.

தலைப்பட்டாள் நங்கை – நங்கை தலைப்பட்டாள் என்பது ஒரு காதலனைக் கூடி அவன் தரும் இன்பத்தைத் துய்த்து அதனால் அன்பும், அறிவும், செயலும் அவனிடத்திலேயே அடங்கி நிற்பதாகும். அது 'அயரா அன்பின் அரன் கழல் செலுமே' என்பதால் பெறப்படும். அயராமையால் அறிவும், அன்பினால் அன்பும், செல்லுதலால செயலும், சிவபெருமான் திருவடியாகிய ஓரிடததிலே உயிர் பெறுகிறது. ஐந்தாம் சூத்திர முதல் பத்தாஞ் சூத்திரம் முடிவாக ஆண்டவன் உடனாய் இருந்து தனக்கு வேறாகிய பொருள்களையும் தன்னுடைய தடத்தக் கோலங்களையும் காட்டிப் பேருதவி செய்கின்றான். பதினோராஞ் சூத்திரத்தில் தன்னுடைய உண்மை நிலையாகிய தன்னைய அவ்வுயிர்க்கு, உடனாய் இருந்து காட்டுதற் பொருட்டுக்

காணும் தன்மையும் உடையனுகின்றுன். அது ஒரு தாயா னவள தவப் பேற்றினுல் தோன்றிய தன்னருமைச் சேய்க் குப்பால நினைந்து ஊட்டுங்கால் அப்பிள்ளை உண்ணுதற் பொருட்டுத் தன் பாலைத் தானும் காண்பது போன்ருகும்.

தலைவன் தாளே தலைப்பட்டாள் – தலைவி திருமணம் முடிந்து, பேரின்பம் துய்த்து, மனையறம் பேணும் கற்பும் பொற்பும் வாய்ந்த மனையறத்திற்குரிய சுறறம் பேண லும், விருந்தோம்பலும் விழுமிய வழிபாடும் செய்வள். அது போன்று திருவருள் கைவரப் பெற்ற சீவன் முக்தர் கள செந்நெறி மனையறம் பேணுங்கால் சிவனடியாராகிய சுற்றம் பேணலும், சிவகுருவாகிய விருந்தோம்பலும், திருக்கோயில் வழிபாடாகிய வழிபாடியற்றலும் விடாது செய்து ஒழுகுவர். தலைவன் தாள என்பது அவனை அடை தற்குரிய அரும் பெரும் முயற்சி என்பது பெறப்படும். இதுவே நங்கை தலைவன் தாள் பட்டதாகும். அவ்வரும் பெரும் முயற்சியே பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் சொல் லும் சேரல் என்பதாகும். சேரல்-கூடுதல். தடுப்பது-மலம். அம்மலங்கழீஇ–அம்மலங்களை அருள் நீரால் கழுவிய பின் மாசு படியாமல் இருப்பதற்கு அன்பரொடு மருவுதல் வேண்டும். அன்பரொடு மரீஇயினுல் வேடமும், ஆலய மும் விடாது வழிபடுவர். வழிபடும் போது மேற்சொன்ன இவ்விரண்டினையும் அரனென்றே கொண்டு வழிபாடு செய்வர். உடல் வழிபாடு உயிரைச் சார்ந்தது போன்று, அடியார் வழிபாடு ஆண்டவனைச் சாரும். ஆண்டவன் உறையுளாகிய கோயிலை வழிபடுவதும், ஆண்டவனைச் சார்வதேயாம்.

இத்திருப்பாட்டினிலேயே கண்ணப்ப நாயனுரின் வர லாற்றையும் காணலாம்.

கண்ணப்ப நாயனுருக்குத் தந்தையால் இடப்பட்ட பிள்ளைத் திருப்பெயர் திண்ணனுர் என்பதாகும். அப் பெயர்க்குக் காரணம் தந்தை அண்ணலைக் கையில் ஏந்துத லுக்கு அருமையாக இருந்ததாகும். அதனுல், உரிமைப் பெயரும் திண்ணன் என இயம்பும் என்றனர். இதன்

குறிப்புப் பொருள் பின்னே நிகழ்வதற்குரிய சிறப்பு உணர்த்துவதாகும். அச்சிறப்பு அருள் ஒழுக்கத்தில் உறதிப்பாடாகிய திண்மை என்பதாகும். கையில் எடுத்தல் என்பது ஒழுக்கத்தை மேற்கொள்ளும் உண்மைக் குறிப்பாகும். சிவபெருமானுக்குரிய சிறப்புக் குணங்கள் ஆறனுள் முடிந்த குணம் திண்மையாகும்; ஏனையவை பெண்மை, ஆண்மை, வண்மை, எண்மை, உண்மையாகும். இவற்றை முறையே ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்பர்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள் — முதற் கண்ணும், குறிப்பினாலும் நாமங்கேட்டாள் என்பது குடுமித் தேவரைக் கேட்டதாகும், குடுமி என்பது மலையின் உச்சியையும், மக்கட் குடும்பத்தையும் குறிப்பதாகும். திருச்சடையினைக் குடுமி என்பதும் ஒன்று. மலையின் உச்சிமேலிருக்கும் தேவர் என்பது பெயர் ஆகும். மலை என்பது என்றும் நீங்காது நிற்கும் ஆண்டவனுடைய பெருங் குணங்களின் குறிப்பாகும். அதனைக் கேட்ட திண்ணனார் மலைமேலேறிச் செல்வாராயினர். செல்லும்போது தன்மேல் பாரம் நீங்குவது போலவும், ஆசை பொங்குவது போலவும், வேறோர் விருப்பு உண்டாக விரைந்து சென்றார். அப்போது நாணனை, தேவர் இருக்குமிடம் எங்கே என்று கேட்டு, அங்கு போகும்படி புகன்றார்.

மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள் — குடுமித் தேவர் மீது நீரும், இலைப்பூவும் கண்ணாரக் கண்டதாகும். அவை எப்படி வந்தனவென்று நாணனைக் கேட்டார். அவன் அதற்கு முன்னொருகாலத்து உன் தந்தையும், நானும் வேட்டையாடிப் பின் இங்கே வந்தோம். அப்பொழுது ஒரு பார்ப்பான் குளிர்ந்த நீரால் இவரை ஆட்டினன். இலைப்பூச் சூட்டினன். உணவு ஊட்டினன். முன்னின்று ஏதோ மொழிந்து, புகழ்ந்து வணங்கினன் என்றான். இதுவே வண்ணம் கேட்டதாகும்.

—(தொடரும்)

சமாஜத் தேர்வுகளின் பாடத்திட்டம்

இளஞ் சைவப் புலவர்

1. இலக்கணம்: நன்னூல் காண்டிகை (ஆறுமுக நாவலர்) (6-50) யாப்பருங்கலக்காரிகை (3-50 கழகம்) தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல் மட்டும்-5-00-கழகம்)

2. இலக்கியம்: திருமுருகாற்றுப்படை (0-75 நாவலர்) கந்தர் கலிவெண்பா (1.50–கழகம்) கந்தர் அநுபூதி (0-60–நாவலர்) திருக்குறள் அறத்துப்பால் (6–50-நாவலர்) பரிமேலழர் உரையுடன். சுந்தரர் தேவாரம் முழுவதும் (1-30–நாவலர்)

3. சாத்திரம்: திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் (1-50–கழகம்) உண்மை விளக்கம் (2-75–கழகம்) திருவருட்பயன் (0-30–கழகம்) கொடிக்கவி, வினாவெண்பா (அம்பை நூலகம்)

4. உரைநடை: சைவத்தின் சமரசம் (திரு. வி. க.) வாகீசர் அல்லது மெய்யுணர்தல். (சிவக் கவிமணி-1-50 கழகம்) தாயுமானவர் வரலாறும் ஆராய்ச்சியும் (கா. சு. பிள்ளை-2–50-கழகம்) பெரிய புராண வசனம் (ஆறுமுக நாவலர்–3.00) திருவிளையாடற் புராண வசனம் (ஆறுமுக நாவலர்–3-50)

சைவப் புலவர்

1. இலக்கணம்: தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்-நாவலர்6-00) சொல்லதிகாரம் (சேனாவரையம்-நாவலர் 3-50) பொருளதிகாரம் (இளம்பூரணம்-நாவலர் 9–50) தருக்க சங்கிரகம் (சிவஞான முனிவர்–நாவலர் 0-60)

2. இலக்கியம்: பெரிய புராணம் (திருநாவுக்கரசர் புராணம் முழுதும்-3–50. காசிமடம், திருப்பனந்தாள்.) சம்பந்தர் தேவாரம் முழுவதும் (அம்பை நூலகம்) திருவாசகம் முழுவதும் (நாவலர் 1·50) ஒன்பதாம் திருமுறை முழுவதும் (நாவலர் 1–50)

3. சாத்திரம்: சிவஞானபோதச் சிற்றுரை (நாவலர் 2-75) சிவஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை-நாவலர்-6-00) சிவப்பிரகாசம் (நாவலர்-2-00) சங்கற்ப நிராகரணம் (அம்பை நூலகம்)

4. உரைநடை: சைவ சித்தாந்த ஞான போதம் (மறைமலையடிகள்-கழகம்-6-00) சிவஞான சித்தியார் ஆராய்ச்சி (ந. சிவகுருநாத பிள்ளை-கழகம் 1-75) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேல் முதலியார், அம்பை நூலகம்) பெரிய புராண சூசனம் நாவலர் 0-75)

சமாஜத் தேர்வு எழுதுவோர் கவனிக்க

தேர்வுஎழுத விரும்புவோர் பாடத்திட்டத்திற் குறித்துள்ள நூல்களை நன்கினிது படித்துப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். சைவப் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெறும் இளைஞர்க்கு அதற்கென அன்பரொருவர் வழங்கிய மூலப் பொருளினின்றும் வரும் வருவாயைக் கொண்டு பரிசு வழங்கப்பெறும். இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் மூன்றும் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் நான்கும் பதிவுக் கட்டணம் ஆகும். விண்ணப்பம் அனுப்பும் இறுதிநாள் 30-9-68. தேர்வு நவம்பர் மாதம் மூன்றும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும். விண்ணப்பத்தில் 1. பெயர் 2. வயது 3. எழுத விரும்பும் தேர்வு 4. தேர்வு எழுத விரும்பும் இடம் 5. படிப்பு முதலிய விவரங்கள் எல்லாம் எழுதப் பெற்றிருக்கவேண்டும். தேர்வுக்குரிய நூல்கள் அடைப்புக் குறியில் காணப் பெறும் இடங்களில் கிடைக்கும். அவைகளின் முகவரிகள் வருமாறு 1. ஆறுமுக நாவலர் அச்சியந்திரசாலை 300, தங்கசாலைத்தெரு, சென்னை-1. 2. தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம், பிராட்வே, சென்னை-1. 3. அம்பை நூலகம், 7 A/1, கோவிந்தன் ரோடு, மேலைமாம்பலம், சென்னை-33. என்பதாகும்.

மதிப்புரை

"தமிழ்—அன்றும் இன்றும்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் மகாவித்துவான் மே. வீ, வேணுகோபாலப் பிள்ளையவர்கள் ஆவர். 1966-ஆம் ஆண்டில் மே. வீ. வே. பிள்ளையவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் அறக்கட்டளைச் சார்பில் ஆற்றிய சொற்பொழிவின் விளக்கமாக இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலில் மக்களிடையே எவ்வாறு ஏடெழுதியோரால் சொற்கள் மாறுபட்டு வழக்கத்தில் வந்துள்ளனவென்பதையும் பல கதைகள் ஆய்வுக்கு இடந்தரா வகையில் எவ்வாறு வந்துள்ளன என்பதையும் ஆசிரியர் நன்கு விளக்குகிறார். நாலடியார் ஆசிரியர், நக்கீரர் முதலிய சில புதுக் கருத்துகளையும் பலர் இலக்கண வழுக்களோடு எவ்வாறு எழுகின்றனர், அவை எவ்வாறு வழுக்கள் என்பதையும் தெளிவாக இந்நூலில் விளக்கியிருப்பது கண்டின்புறத்தக்கதாகும். இந்நூலிலிருந்து பல உண்மைகளைத் தெற்றெனெ உணரலாம். கிரௌன் அளவு 80 பககங்கள் கொண்ட இவ்வருமை நூல் விலை ரூ. 1-25 ஆகும். இலக்கணப் பிழையின்றி எழுதவிரும்பும் ஒவ்வொருவரும் இந்நூலை அவசியம் படித்துத் திருந்தலாம். யாவரும் வாங்கிப் படிப்பார்களாக. நூல் கிடைக்குமிடம்:—தமிழியல் மன்றம், 244/245, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-1. என்பதாகும்.

(அம்பை)

"திருமுறை நூற்றெட்டு" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இதில் பன்னிரு திருமுறைகளிலிருந்தும் 108 பொறுக்குமணிகளாகப் பாக்களைத் தொகுத்து, சித்தாந்த ஆசிரியர் திரு. மு. அருணாசலம் எம். ஏ. அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இதனை நம் சைவ சித்தாந்த மகா சமாஜ மாநாட்டில் திருவெண்காட்டிலேயே வெளியிட நினைத்தும் இயலவில்லைபோல் தெரிகிறது. நம் பரந்து பட்ட திருமுறைகளுக்குச் சுருக்க நூல் அவரவர் பக்குவ நிலைக்கேற்றவாறு தொகுத்து வெளியிடுவது இயற்கை. அம்மரபு ஒட்டிப் பல்வேறு திரட்டு நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் இந்நூலும் தலையாய இடத்தைப்பெறும். கையடக்கப் பதிப்பு விலை 25 காசுகள். வேண்டுவோர் "காந்தி வித்தியாலயம் திருச்சிற்றம்பலம், பந்தணை நல்லூர் வழி, தஞ்சை மாவட்டம்" என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

(அம்பை)

சைவ சித்தாந்தச் சாத்திரப் பயிற்சி வகுப்பு

திருச்சி மாவட்டம் லால்குடியில் (திருத்தவத்துறை) 19-5-68 முதல் 8-6-68 முடிய 21 நாட்களுக்கு சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சி வகுப்பு நடைபெறும். காஞ்சிபுரம் திரு க. வச்சிரவேல் முதலியார் அவர்களும், திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்களும் சிவஞான சித்தியார் பற்றியும், ஆளுடைய பிள்ளையார் தோத்திரப் பாக்கள் பற்றியும் முறையே வகுப்பு நடத்துவார்கள். தமிழ் வித்துவான், புலவர், தமிழ் எம்.ஏ., பட்டம் பெற்றவர்கள் இவ்வகுப்புக்களில் சேர்ந்து பயிலலாம். இருவேளை உண்டி, உறையுள் ஆகியன இலவச வசதி உண்டு. வகுப்பில் பயில விரும்புவோர் 3—4—68 க்குள் மனுச் செய்து கொள்ளவும். விண்ணப்பமிட வேண்டிய முகவரி:-

திரு. ஜி. வரதராசப் பிள்ளை பி.ஏ.,
7, வடக்கு வீதி, லால்குடி,
திருச்சி மாவட்டம் என்பதாகும்.

பிற செய்திகள்

சித்திரைத் திங்கட் சிறப்பு நாள்கள்

10 (22-4-68) திருநாவுக்கரசு நாயனார் விழா
16 (28-4-68) சிறுத்தொண்ட நாயனார் விழா
18 (30-4-68) மங்கையர்க்கரசியார் விழா
20 (2-5-68) விறன்மிண்டநாயனார் விழா
27 (9-5-68) உமாபதி சிவாசாரியார் விழா
28 (10-5-68) இசை ஞானியார் விழா
29 (11-5-68) திருக்குறிப்புத் தொண்ட நாயனார் விழா.

திருமயிலைக் கபாலீச்சுரத்தில் நிகழ்ந்த விடாயாற்றி விழாவில் நாள்தோறும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. அவற்றுள்ளும் இவ்யாண்டு சமாச அன்பர்களைக் கொண்டு சமயப் பிரசாரத் தொண்டு செய்ய வாய்ப்பளித்த தேவத்தானத்தாருக்கு சமாசம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

நம் சமாசச் சார்பில் பெரிய புராண விரிவுரையை சமாசப் புது அலுவலகத்தில் 7—4—68 காலை 9-30 மணிக்குக் கயப்பாக்கம் சித்தாந்த வித்தகர் திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் நடத்தினார்கள். திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார் தொடக்கவுரை, திரு.ச. சச்சிதானந்தம பிள்ளை வாழ்த்துரை, அம்பை சங்கரனார் நன்றியுரை முதலியனவும நிகழ்ந்தன. ஒவ்வொரு ஞாயிறு தோறும் தொடர் சொற்பொழிவு நிகழும்.

17-3-68ல் திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையில் 'காரைக்காலம்மையார்' திருநாள் கொண்டாடப் பெற்றது. அதுபொழுது சேலம் மாவட்டம் பொத்தனூர் புலவர் திரு. ப. மாணிக்கம் அவர்கள் 'அம்மையாரின் அருந்தொண்டு' என்பது பொருளாக அரிய விரிவுரையாற்றினார்கள். செயலாளர் திரு. சிவப்பிரகாசம் நன்றி கூறினார்.